மக்களைக் கலங்க வைக்கும் காங்கிரசின் அவல நாடகம்!

கடவுள் - காந்தி பெயரால் கண்ணியத்தின் வெளியேறுக!

வரலாறு காணாத ஊழல் சகாப்தம்!

வருவாய்தரும் வியாபாரமாகிவிட்டது காங்கிரஸ் அரசியல்!

சியாங்கே-ஷேக் பற்றியும், அவரது வீழ்ச்சிபற்ற கூமின்டாங் கட்சி பற்றியும் இன்று பலப்பட்டப் பேசப்படுகிறது; ஆனால் வரலாற்றை யெழுத முற்படுங்கால், நம் காங்கிரஸ் தலைவர்களின் கேவல நடவடிக்கைகளுக்கு மன்னர் சியாங்கேயுடையவும், அவரது கட்சியினுடையவும் புரைபட்ட நடத்தைகள் பின்னடைந்த தீர்ப்பு முக்கியத்துவமின்றி மறைந்துவிடும்! அன்றியும், சோங்குக்கு எதிராக சீனு மாசேதுங்கை உண்டாக்கிற்று; ஆனால் இந்தியாவின் நிலைமையென்ன? இங்கத்திய நிலை மிகமிகவும் மோசமாகவே இருக்கிறது; ஒளிக்கதிர் ஒன்றைக் கூடக் காணோம்; எனினும் ஒளியை விழைந்து நிற்கிறோம் நாம்! இவ்வேலை சூழ்ப்பம்-நிலவரம் மீண்டும் தலையெடுத்தே தீரும்; இவ்வுபகண்டம் மற்றுமொரு கை இருண்ட சகாப்தத்தினுள் நுழையவே வழியேற்படும்; இருட்டில் நுழைந்த பின்னர் தீர்ந்தாலென்பது இயலாத காரியமேயாகிவிடும்.

எனவே, இந்நாட்டு மக்கள் உண்மை நிலையை அறிந்து கொள்ள வேண்டிய இன்றியமையாக் கட்டத்தை நெருங்கிவிட்டனர். கடந்த இரண்டாண்டு காலத்தில் காங்கிரஸ் தலைவர்கள் நடுநிலையாளர்களுக்கும், விடுதலையுணர்வுக்கும் பெருத்த தீங்கு விளைவித்து விட்டனர். பிரிட்டிஷ் ஆட்சிக் காலம் முழுவதிலும் புரியப்பட்ட பொல்லாங்குகள் அவ்வளவையும் விஞ்சிவிட்டன நம் காங்கிரஸ் தலைவர்கள் இழைத்த பொல்லாங்குகள். இது உயர்வு நவிற்சியல்ல; உண்மை!

ஓர் திட்டம், கொள்கை கோட்பாடு இன்றி இன்றைய காங்கிரஸ் தலைமை இருந்து வருகிறதென்பதை யாரே மறுக்க முடியும்? 'மகாத்மா' மீது சத்தியம் செய்கின்றனர். ஆனால் கள்ளமார்க்கெட் பணத்தில் வயிறு கழுவுகின்றனர், எத்தனை யெத்தனை லஞ்சலூழல் வழக்குகள்! லட்சக்கணக்கானவை இன்னும் கண்டுபிடிக்கப் பெறாமலே இருக்கின்றனவே! லஞ்சலூழல் குற்றவாளி தண்டிக்கவாவது படுகிறானா? என்? இக்குற்றத்துக்கு அஞ்சாற்பட்டவரா, என்ன நீதி இது?

வங்க மந்திரிசபை லஞ்ச ஊழல் பற்றி விசாரணை நடத்துவதாக, கடந்த ஜூலையில் வாக்களித்தார் பண்டித நேரு; நிலைமையைச் சரிப்படுத்த, 1949-ம் ஆண்டு மூலதனத்தை முன்னிட்டும் மாகாணத்தில் பொருத்தேர்தல் நடத்தப்போவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரை இரண்டும் நடந்தபாடில்லை.

சென்னை நிலைமை மட்டுமென்ன? ஒரு மந்திரி இன்னொரு மந்திரியைக் குற்றஞ்சாட்டிவிட முடியாதே! அனைவரும் அந்த ஊழல் சாகரத்தில்தானே மூழ்கிக் கிடக்கின்றனர்!

பீகாரில், அரசியலென்பது மிகவும் லாபகரமான வியாபாரமாகிவிட்டது. மத்திய மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் அம்மாதான அரசியல் நல்ல 'டிவிடெண்டை' (லாபம் பங்கு) அளித்து வருகிறது.

ஒரிய மாகாணத்தில், பாலிஸ் ஒப்பந்தம் பேரவையில், கலவரித்தாக்கல் தொடங்கியுள்ளது. அஸ்ஸாமில் காங்கிரஸ் பிரதமர் தனது வேலைகள் எவையெவை என்பதையே மறந்து, எல்லோரிடத்தும் சண்டைபிடித்துக் கொண்டிருக்கிறார்; உள்ளபடியே அவரது ஆட்சி உதவாக்கரையாட்சியாக மாறிவருகிறது.

ஆண்டவனே, என்ன இவர்கள் இப்படி ஆகிவிட்டார்கள்? அவர்களிடமிருந்து எங்களைக் காப்பாற்று—அவர்கள் என்ன செய்திருக்கிறார்களென்பதை அவர்களே உணரவில்லை! தொடர்ந்து அவர்கள் ஆட்சியில் நீடிப்பார்களேயானால், லட்சக்கணக்கானோர் மாண்டு மடிவரென்பது உறுதி. உணவுக்கலவரங்கள்; பட்டினிப்பாசி வேலைநிறுத்தங்கள்; மீண்டும் இங்கொருசீனு; ஒரு மாகாணத்தின் குரல் வளையில் இன்னொரு மாகாணம்; ஒரு மந்திரி இன்னொரு மந்திரியைத் தந்திரத்தாலாவது மடக்கப் பார்ப்பது—இன்னும் பிறவே தலையெடுத்தாடும்!

எனவே, புதிய இந்திய அரசியல் நிர்ணய சபையாவது, வடநாட்டை யெதிர்த்துத் தென்னாட்டுக் கச்சை வரிந்துகட்டி நிற்கிறது; முன்னுள் சமஸ்தானங்களிலோ, இப்போதைய 'ஜனநாயக ஆட்சியைக் காட்டிலும் பழைய ஆட்சியே பரவாயில்லை' என்று பலரும் அபிப்பிராயப்படுகின்றனர். பீஹார் சர்க்காரை அடுத்து இந்தியாவையும் அமெரிக்கா இதனால் விரோதித்துக் கொள்வதாகும் என்றும் கெய்ஸ்விபி பத்திரிகைகளின் நிருபர் கருதுகிறார்.

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd.No.M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (5—1—50) வெளியூர் (6—1—50) [இதழ் 135

கம்யூனிஸ்டுகளை யெச்சரித்து அமெரிக்காவின் போர்க்கணைகள்!

பார்மோஸா நோக்கி யு.எஸ். கப்பல்கள் புறப்பாடு

இந்தியா பகைமையையும் தேடிக் கொள்கிறதா ரஷ்யா?

லண்டன், ஜன. 4—

பனிக் கடற்படையிசேர்த்து பார்மோஸா ாதி காப்பிற்கு உதவுவதற்காக 'பாக்ஸர்' என்ற அமெரி விமானங்களும், மற்றும் இராசதாரிகளும் ஸண்டியா கோவிலிருந்து இளம்பிரிட்டன என்று, குளோப் நியூ யார்க் நிருபர் அறிவிக்கிறார்.

இந்த விமானங்களைத் தவிர கப்பலில் 45 விமானங்கள் இருக்கிறதாம். இதைத் தவிர ஜப்பானிலும், ஒகினாவிலும் வேறு அமெரிக்க விமானங்கள் தயாராக இருக்கின்றன

சியாங்குக்கு உதவுவ தென்ற புதுக் கொள்கையில் ம்யூனிஸ்டுகளுக்கு எதிரா யுனைட்ஸ்டேட்ஸ்போரி இறங்கிவிட்டதென்ற அர்த் தம் என்று சில விமர்சகர்கள்

இராணுவத்தை பலப்படுத்துகிறது ஹங்கேரி!

லண்டன், ஜன. 4—

பூரோ எல்லையில் ஹங்கேரி தன் ராணுவத்தை மார் 10 டிவிஷன்களை வைத்திருப்பதாக சமீபத்தில் டைத்துள்ள செய்தி உறுதியாக ஹங்கேரி யிலிருந்து பூரோவிற்கு ாப்பிச் செல்லமுடியாதபடி லத்தை சுவர் போடப்பட்டி ருப்பதாம்.

ஹங்கேரிய ராணுவத்தை ரெட்டிப்பாக்க உத்தேசித்திருப்பதை ஆஸ்திரியா பஞ்சம்தான் லண்டனி ருக்கிறார்.

பொதுவுடைமையெதிர்ப்புப் பணியில் இந்தியாவுக்குத் தலைமை!

'கார்டியன்' முடி சூட்டுகிறது!

லண்டன், ஜன. 4—

தென் கிழக்கு ஆசியாவில் கம்யூனிஸ்டு ஆபத்து பரவாமல் தடுக்க இதர நாடுகளுக்கு இந்தியா வழி காட்டவேண்டும் என்று 'மான்செஸ்டர் கார்டியன்' ஒரு நீளமான தலையங்கத்தை எழுதியிருக்கிறது.

ஆசியாவில் சுதந்திரச் சின்னமாக பண்டித நேரு விளங்குகிறார் என்றும், அவரே தலைமை வகித்து இதற்கு நடவடிக்கை எடுக்கத் தகுந்தவர் என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது.

அப்பத்திரிகை மேலும் எழுதியிருப்பதாவது—இந்தியாவில் கம்யூனிஸ்டு கட்சியில் உறுப்பினர்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டது. இந்தியத் சோஷலிஸ்ட் கட்சி இளைஞர்களை தன் பக்கம் இழுக்கத் தவறிவிட்டதால், கம்யூனிஸ்டு கட்சி இன்னும் ஒரு ஆபத்தாகவே இருந்து வருகிறது.

பர்மாவில் கம்யூனிஸ்டுகளிடையே பிளவு ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும், பர்மிய சர்க்கார், கோன்களுடன் சண்டையிட்டு வருவதால், அதை சாதகமாகக் கொண்டு கம்யூனிஸ்டுகள் தங்கள் கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

பர்மாவை, பிரிட்டன் இவ் விஷயமாக எச்சரித்தால் தவறாகவே படும்.

இந்தியா எச்சரிப்பதை, பர்மியர்கள், நண்பனின் புத்திமதியாக ஏற்பார்கள்

இத்துடன் மட்டுமின்றி ஸயாமுக்கும், ஆந்தைபொவுக்கும் கலவரங்கள் ஏறபடும் நிலை இருக்கிறது

பத்தாம்பசலிக் கருத்துக்கள் நிறைபாடல்கள்

குழந்தைகள் உள்ளத்தைத் தீவிரமாய்ப் பாதிக்கும்

லண்டன், ஜன. 4—

பழைய காலக் குழந்தைகளின் பாடல்களில், பத்தாம் பசலிக் கருத்துக்கள் வெளியிட்டிருப்பதை, இன்று உலகிலுள்ள அதிருப்தியான நிலைமைக்குக் காரணம் என்று, ஸர் செஸ்டரைச் சேர்ந்த ஜியாபிரிஹால் என்பவர் கருதுகிறார்.

தான் குழந்தையாக இருந்த போது, இப்பாடல்களைக் கேட்டுப் பயந்தேவிட்டதாகவும். இப்பொழுது அவைகளைத் தான் திருத்தி எழுதி பிருப்பதாகவும் அவர் கூறுகிறார். குழந்தைகளுக்கான பாடல்கள் அற்புதனிதிருக்க வேண்டும் என்று அவர் அபிப்பிராயப்படுகிறார். —குளோப்.

கேரள யூனியனிலும் கம்யூனிஸ்டுக் கட்சிக்குத் தடை

திருவாங்கூர், கொச்சி ஐக்கிய யூனியனிலுள்ள அனைத்து கம்யூனிஸ்டு ஸ்தாபனங்களும் சட்ட விரோதமாக்கப் பெறலாம் என்று குரோதத்தில் டிசம்பர் 31-ந் தேதி வந்த ஒரு இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸின் ரூம் கொலை செய்யப்பட்டதைதொட்டியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கொச்சி மாவட்டத்தில் போலீஸார் ஜன. 2-ந் தேதி பல்வேறு சுமார் 50 கம்யூனிஸ்டுகளை கைது செய்திருப்பதாகத் தெரிகிறது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

மாலை மணி

சென்னை 5—1—50 வியாழக்கிழமை

திருச்சித் தீர்மானங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில், 'முதல் மாநாடு' என்று பொறிக்கப்படும் பெற்றியினைப் பேரோடும் புகழோடும் பெற்றுவிட்டது திருச்சி!

ஒரு மாநாட்டின் முழு அடிப்படை நோக்கம், எந்த அளவுக்கு வெற்றிபெறுகிறது என்பது. அது நிறைவேற்றிக் காட்டும் முடிவுகளைப் (தீர்மானங்களை) பொறுத்திருக்கிறது. அந்த நிலையில் நின்று பார்க்கும் போது, திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு, நாட்டு மக்களையும். ஆட்சிக் குழுவினரையும் சிந்திக்க வைத்துச் செயல் நடத்தச் சொல்லும் பல அரிய முடிவுகளைச் செய்திருப்பது பெரிதும் போற்றுவதற்குரியதாகும். அரசியல்—பொருளாதாரம்—சமுதாயம் பற்றிய பலவிதப் பிரச்னைகளும், உடனடியாகத் தீர்வதற்கு ஆன வழிவகைகள், இன்ன இன்ன என்று எடுத்துக் காட்டியும், அழிவு பயப்பனவற்றைக் கண்டித்தோதுக்கியும், ஆக்கம் பயப்பனவற்றிற்கு ஆதரவு காட்டியும் பல தீர்மானங்களை அது நிறைவேற்றியிருக்கிறது.

தீர்மானங்கள் அனுதாபம் காட்டுதல்—வாழ்த்துத் தெரிவித்தல்—கண்டித்துரைத்தல்—வற்புறுத்திச் சொல்லுதல்—எடுத்து மொழிதல்-ஏன் என்று கேட்டல்—ஆலோசனை கூறுதல்—ஆக்க வழி காட்டுதல்—உதவி கோருதல்—உயரிய வழி தேடுதல் ஆகிய பல்வேறு வடிவங்களில் நிறைவேறியுள்ளன. முன்னேற்றக் கழகத் தோழர்கள் சிந்தித்துச் செலாற்றவும், ஆட்சிபீடம் ஏறினோர் கண்டு தெளிவு பெறவும் அவை பேருதவி புரியும் என்பதில் ஐயமில்லை.

இருபத்திரண்டு தீர்மானங்களையும், அவற்றில் சிலவற்றின் உட்பிரிவுகளையும் நிறைவேற்றிவைக்கும் முகத்தான், முன்மொழிந்தும், வழிமொழிந்தும் சுமார் முப்பத்தாறு தோழர்கள் விளக்கவுரை ஆற்றியிருக்கிறார்கள். விளக்கவுரை பகர்ந்த அவர்கள் அனைவரும் கேட்டார்ப் பிணிக்கும் தகைமையில், அளந்து அளவோடு பேசியது பெரிதும் பாராட்டி மகிழ்வதற்குரியதாகும். மாநாட்டில் கலந்து கொண்டோர் அனைவரும் அந்தப்பயனைப் பெற்றனர்.

மறைந்தவர்களின் தொண்டுகளை அறிந்து, ஏற்று நடக்கும் உண்மையான நாமனைவரும் பெறும் பொருட்டு, மரியாதை காட்டும் முறையில், விருதை வள்ளல் பெ. சி. சிதம்பரனார் மாவீரர் பட்டுக்கோட்டை அழகர்சாமி, ஆசிரியர் வேலாயுதம், உண்மைத் தொண்டர் ஜலகண்டபுரம் அர்த்தனரி ஆகியோர் மறைவு குறித்து அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அகில உலக அரசியல் பற்றிய தீர்மானங்களாக:— (i) சீனா, இந்தோனேஷியா குடியரசுகளுக்கு வாழ்த்துக் கூறுதல் (ii) உலகப் போருக்கு வித்திடும் வல்லரசுகளின் போக்குக்குக் கண்டனம் தெரிவித்தல் (iii) இலங்கை வாழ் தமிழர்களின் உரிமையைப் பறிக்கும் இலங்கை அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்தல் ஆகிய இவை நிறைவேற்றப்பட்டுள்ளன. இன்றைய உடனடிப் பிரச்சினைகளாக இவை காணப்படுவதால், மாநாடு இவற்றைப் பொறுத்து தன் கருத்தை வெளிப்படுத்தியிருப்பது போற்றுவதற்குரியதாகும். திராவிட முன்னேற்றக் கழகம் அகில உலக அரசியல் பிரச்னைகளில் செலுத்தும் கண்ணோட்டத்தையும் மக்கள் ஒவ்வாறு உணர்ந்து ஊகித்துக்கொள்வதற்கு இவை சிறந்த எடுத்துக் காட்டுகளாக நிற்கின்றன.

இந்தியத் துணைக்கண்ட அரசியல்—பொருளியல், சமுதாயம் பற்றிய தீர்மானங்களாக:— (i) 12 சதவிகிதத்தினரின் ஒட்டுரிமையை மட்டுமே பெற்றுள்ள ஏகக் கட்சி அரசாங்கத்தார், பலரையும் பலவிதத்தில் கட்டுப்படுத்தும் அரசியல் அமைப்பை ஏற்படுத்துவதற்குக் கண்டனம் தெரிவித்தல் (ii) புதிய இந்திய அரசியல் அமைப்பில் மாகாண உரிமைகள் நிலைகுலைக்கப்பட்டிருப்பதைக் கண்டித்தல். (iii) புதிய அரசியல் அமைப்பால்—திராவிட நாட்டுக்கு நன்மை ஏதும் ஏற்படாது என்று படுவதால், திராவிடம் பிரிந்து தனி அரசாக அமைவதை உறுதி செய்தல் (iv) இலங்கைத் தமிழர் விஷயமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி இந்திய அரசாங்கத்தை வற்புறுத்தல். (v) அமெரிக்க முதலாளிகளின் முதலீட்டை வரவேற்கும் இந்திய அரசாங்கத்தை எச்சரிக்கை செய்தல். (vi) தொழிலாளர்களைத் தேசீய மயமாக்காமல் தனி முதலாளிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் போக்கிற்குக் கண்டனம் தெரிவித்தல். (vii) தேசீய தொழிற்சங்க காங்கிரசின் பிற்போக்கு நடவடிக்கைகளுக்குக் கண்டனம் தெரிவித்தல். (viii) இந்துக் கட்டத்திருத்த மசோதாவுக்கு முழு ஆதரவு அளித்தல் ஆகிய இவை நிறைவேற்றப்பட்டுள்ளன. இவை எல்லாமும் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்னைகள் என்றாலும், 1950 ஜனவரி 26-ம் நாள் அமையப்போகும் புதிய குடியரசுத் தன்மைபற்றி மாநாடு, இந்தச் சமயத்தில் தீர்மானம் நிறைவேற்றியது அரசியலாது வேண்டப்படுவதாகும். அதை மாநாடு செய்துள்ளது கடுத்தித் கொள்ளுவதற்குரியதாகும். நல்ல பல செயல்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆதரவு எங்கும், எப்பொழுதும் உண்டு என்பதற்கு எடுத்துக்காட்டு, இந்து திருத்தச் சட்டமசோதாபோன்றவைகளுக்கு முழு ஆதரவு காட்டியிருப்பதாகும். அதுவும் மகிழ்வதற்குரியதாகும்.

சென்னை மாகாண அரசியல்-பொருளியல்-சமுதாயம் பற்றிய தீர்மானங்களாக:— (i) தொழிற் சங்க உரிமைகளைப் பறிப்பதற்குக் கண்டனம் காட்டுதல் (ii) வேண்டாத இந்தி மொழியைத் திணிக்கும் எந்தத் திட்டத்திற்கும் எதிர்ப்பு தெரிவித்தல் (iii) விருப்பப்பாட இந்தியைக் கட்டாயப் பாடமாக வற்புறுத்தும் தலைமையாசிரியர்கள் செயலுக்குக் கண்டனம் தெரிவித்து, அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி வற்புறுத்தல் (iv) திருச்சி வானொலியில், இந்தி மறைமுகமாகத் தமிழாக்கத்தைக் கெடுக்கும் முறையில் புகுத்தப்பட்டிருப்பதற்குக் கண்டனம் கூறுதல் (v) மதுவிலக்குச் சட்டத்தைக் கேலிக்கூத்தாக்கும் போக்குக்குக் கண்டனம் தெரிவித்தல் (vi) மதுவிலக்குப் பிரசாரகர்கள் என்ற பேரால், 442 காங்கிரஸ்காரர்களுக்கு வரிப்பணத்தைப் பாழாக்கிக் கொடுத்து, கட்சிப் பிரசாரம் செய்யப்பட்டதைக் கண்டித்தல், (vii) எழுத்துரிமை, பேச்சுரிமை ஆகியவற்றை அடக்குமுறையால் பறிக்கும் போக்குக்குக் கண்டனம் காட்டுதல், (viii) வடநாட்டு அகதிகளுக்கு பெரும் பொருள் செலவில் திராவிடத்தில் ஆதரவு அளிப்பதற்குக் கண்டனம் (ix) அறநிலையச் சொத்துக்களை மக்களின் ஆக்கத்திற்கும் பயன்படுத்தும்படி வற்புறுத்தல் (x) ஜமீன் ஒழிப்பு முறையில் கையாளும் போக்குக்கு எச்சரிக்கை (xi) மாஜி கள்ளுறக்கும் தொழிலாளர்களுக்கு உதவி செய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுதல் (xii) கைத்தறியாளரின் கஷ்டத்தைப் போக்க வடநாட்டு மில் துணி இறக்குமதிக்குத் தகுந்த கட்டுப்பாடு விதிக்கும்படி வற்புறுத்தல் (xiii) வேலாயுதம் கொலை வழக்கை மீண்டும் விசாரணைக்குக் கொண்டு வரும்படி செய்து நீதி காணும்படி கேட்டுக் கொள்ளுதல் ஆகிய இவை நிறைவேற்றப் பட்டுள்ளன. திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம், கொள்கை, அதுகாண விரும்பும் நீதி ஆகியவைகளை இத்தீர்மானங்கள் மூலமாக யாரும் தெள்ளத் தெளிய உணர்ந்துகொள்ளலாம்.

கழகக் கொள்கைகளைப் பரப்பும் சாதனமாக நாடகக் கலையை உருவாக்கித் தரும் பொறுப்பை, மாநாடு தோழர் கே. ஆர் ராமசாமி அவர்களை ஒரு தீர்மானம் மூலம் கேட்டுக்கொண்டிருக்கிறது. அதற்கேற்ப தோழர் கே. ஆர். ராமசாமி அப்பொறுப்பை ஏற்றுக் கொள்ள முழுமனதோடு முன் வந்ததல்லாமல், தன்னாலான எல்லா உதவிகளையும் செய்து தருவதாக வாக்களித்துள்ளது. உள்ளடியையே பெருமையும், பூரிப்பும் தருவதாகும்,

திருச்சி மாநாட்டுத் தீர்மானங்கள் நாட்டு மக்களுக்கு ஒரு விழிப்புணர்வையும், முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கு உறுதியையும் பயக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை, எனவேதான், தீர்மானங்கள் செயல்களாக மாறட்டும் என்கிறோம் செயல்களாக மாற்றுவோம் வாரீர் என்று நாட்டவரனைவரையும் அழைக்கிறோம்!

வசதிகளை வகைப்படுத்தி வாழ்வை வளம்படுத்துக!

விவசாயம் பெருக விவேகமும் ஆற்றலுமே தேவை

ஆக்ஸ்போர்டு அறிஞர் தரும் கருத்துரை

"விவசாய அபிவிருத்தியில் மூலதனத்தை விட முக்கியமான அம்சம் என்னவென்றால் நிலம் நன்றாக இருக்க வேண்டும். சாளமான உரவசதி இருக்க வேண்டும். வேலை செய்ய நல்ல பயிற்சி பெற்ற மனிதர்கள் வேண்டும். குடியானவர்களுக்கு விஞ்ஞான முறையில் பயிற்சி அளிக்க வேண்டும். குடியானவர்களுக்கு நவீன சாகுபடி முறைகளில் நல்ல பயிற்சி அளிப்பது மிக மிக அவசியம்.

விவசாயத்தின் மூலம் இடைக்கும் வருமானம் குறைவாக இருப்பதற்குக் காரணம், தொழிற்சாலைகளைப் போல் விவசாயத் தொழிலில் கட்டுக்கோப்பும் ஆராய்ச்சியும் அதிகமாக இல்லாததே

விவசாயத்தில் மட்டுமல்லாமல் எல்லாத்துறைகளிலும் அபிவிருத்தி ஏற்படுத்த இந்தியாவில் வசதியிருக்கிறது. இன்றியமையாத் தேவைகளுக்கு மட்டிலுமல்லாது, சாதாரண ஆடம்பரத் தேவைகளைக் கூட இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய இந்தியாவில் வசதி இருக்கிறது."

இது, அண்மையில் சென்னைக்கு வந்திருந்த ஆக்ஸ்போர்டு விவசாயப் பொருளாதார ஆராய்ச்சிக் கழகத்தின் டைரக்டரான தோழர் எ. டபிள்யு. ஹஷ்பி அவர்கள் வெளியிட்ட கருத்தாகும்.

உற்சாகமான கருத்துக்கள்—உற்சாகமான கருத்துக்கள் என்றும் உரத்த குரலில் கேளோர் வாரீர் வெளிவிடாத நல்ல கருத்துக்களை நாட்டிற்கு எவ்விருப்பினும் தோழர் ஹஷ்பி.

இந்நாட்டில் விவசாயத் தொழில்மட்டுமின்றி, உலக விவசாயத் தொழிலிலேயே இத்தகைய தாழ்ந்த நிலைமைக்கு காரணம் என்ன என்பதை அவர் அழகாக விளக்கியிருக்கிறார். தொழிற்சாலைகளில் காணப்படுவதைப் போன்ற கட்டுக்கோப்பும் ஆராய்ச்சியும் விவசாயத் தொழிலில் இல்லாமையே விவசாயத் தொழிலின் இத்தகைய கேட்டுக்கு முக்கிய காரணங்களில் ஒன்று என்பது உண்மையே. கட்டுக்கோப்பின்மைக்குக் காரணம், விவசாயின் முதல் வினாவாகவே இருந்து வருவதே ஆகும். விவசாயின் உழைப்பு பிறர்க்கு, முதலாளிகளுக்கு உண்மையில் பெருமை தேடித்தருகிறது என்ற நினைப்பு உள்ள நாட்டில் கட்டுக்கோப்பை எவ்வளவு எதிர்பார்க்க முடியும்!

அத்தகையோர் அவர் எடுத்துக் காட்டும் காரணம், தாழ்ச்சியின்மை என்பது. இந்திய நாட்டைப் பொறுத்தவரையில் சர்வசாதாரணமாகிவிட்டது. இத்தகைய மனிதர்களது தாழ்வு மனப்பான்மையை நீக்கி, அவர்களுக்கு மீண்டும் தன்னம்பிக்கை ஊட்டி, அந்த அளவுக்கு இந்நாட்டில் விஞ்ஞான அறிவு வளர்ந்திடவேண்டும்.

கலப்பைக் குறிப்பிடப்பட்டிருப்பது 'ஹரப்பா' அகழ்வாராய்ச்சி அமைப்பு இன்னும் என்பதாகும். அகழ்வாராய்ச்சி முறை என்பது இன்னும் மட்டமாகவே இருக்கிறது; மனிதனுடைய அக்கறையின்மையே அதற்குக் காரணம் என்று முடிவுகட்டிவிடுவதே இந்நாட்டில்! தன்னலமே மறந்த தன்னலமற்ற மக்கள். தன் நாடு, தன் இனம் என்ற உணர்வுகொண்டவர்களே. தமது தாழ்மை, தமது ஏழ்மை என்ற அளவுகோல் முறைகளில் காட்டம் செல்லும்.

விவசாயம் மட்டுமின்றி மற்றெல்லாத் துறைகளிலும். அபிவிருத்தி ஏற்பட வசதி இருக்கிறது இந்தியாவில் என்பதும் அந்த ஆக்ஸ்போர்டு அறிஞர் கூறியதும், உண்மையே. இருந்தும் என் செய்வது? வசதியை வகைப்படுத்தி வாழ்வை வளம்பெற்ற இன்றியமையாத வேண்டும் என்ற உணர்வு என்ற அளவிலேயே இருக்கிறதே!

எனவே, எல்லாத்துறைகளிலும் [illegible] விஞ்ஞான அறிவை அதிகமாக உபயோகிக்க வேண்டும் என்ற உணர்வு [illegible]

அறிவுக் கதிர்!

"இரும்புத் தசைகளும், உருக்கு நரம்புகளும், அத்துடன் உலகின் அரியற்புத ரகசியங்களை ஊடுருவி அறிய வல்லதும், தங்கள் இலட்சியத்தை யடைவதற்காக சமுத்திரத்தின் அடிவரை சென்று சாவையும் எதிர்த்து நிற்க வல்லதுமான வலிமை வாய்ந்த மனங்களும் உடைய தீரர்களையே, நம் நாடு தற்பொழுது வேண்டி நிற்கின்றது"

—விவேகானந்தர்

விருதுநகரில் ம. தி. மு. கழக நிதிக்காக ரூ. 4001

"சந்திரமோகன்" நாடக முடிவில் மாகாணத் தலைவர்களின் பேச்சு

விருதுநகர், டிச. 30—மத்திய திராவிட முன்னேற்றக் கழக நிதிக்காக 28, 27-தேதி நாட்களில் சென்டரல் சினிமாவில் "சந்திரமோகன்" என்ற சரித்திர நாடகம் நடைபெற்றது. நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி, தோழர்கள் சின். என். அண்ணாத்துரை, ஈ.வி.கே. சம்பத், காஞ்சித்கல்யாணசுந்தரம், ஈழத்துஅடிகள் மற்றும் பல இயக்கத் தோழர்கள் நாடகத்தில் முக்கிய பங்கெடுத்துச் சிறப்புடன் நடித்தனர் நாடகத்திற்கு, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இருந்து பெருவாரியாக இயக்கத் தோழர்கள் வந்திருந்தனர். முதல்நாள் நாடகத்திற்குத் தலைமை தாங்கிய தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமை வகித்து நாடகத்தைப் பாராட்டிப் பேசியதோடு, நாட்டு நிலையையும் விளக்கிப் பேசினார். இரண்டாம் நாள் நாடகத்திற்கு விருதுநகர் நகர சபைத் தலைவர் திரு எம். எஸ். பெரியசாமி அவர்கள் தலைமை வகித்தார்.

எஸ். உத்தண்டன்

நிதியளிப்பை ஒட்டி தோழர் எஸ். உத்தண்டன் பேசுகையில், பார்ப்பனரல்லாதார் கட்சியின் வரலாற்றை எடுத்துக் கூறி, திராவிட முன்னேற்றக் கழகம் அமைப்பு முறையோடு இயங்கவேண்டும் என்றும், அதற்காக இன்று கொடுக்கப் படுகிற நிதியைப் பயன்படுத்தவேண்டும் என்றும், இப்படிப் பல ஊர்களிலும் நிதி அளிக்க முனவரவேண்டும் என்றும் பேசிமுடித்தார்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

தோழர் ஏ. வி. பி. ஆசைதம்பி பேசுகையில், பணம் இலலாவிட்டால எந்தக் கட்சியும் வேலை செய்ய முடியாது என்றும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப் பட்டு மூன்று மாதங்களுக்குள் சுமார் 400 கிளைக் கழகங்களை தோன்றிவிட்டன எனவும், தி. மு. கழகத்திற்கு ஆதரவு அதிகமாய இருப்பதற்கு இப்படிப்பட்ட நிதியளிப்பு நிகழ்ச்சிகளே தக்க சான்று எனவும் கூறினார்.

பின்னர் தோழர் ஈ. வி. கே. சம்பத் தி. மு. கழகத்தின் லட்சியம் பற்றிச் சிறிதுநேரம் பேசினார்.

கே. ஆர். இராமசாமி

அடுத்து நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி பேசுகையில், தனக்கு நாடகத்துறையை விட்டுவிட்டு, கட்சிப் பணியாற்ற அதிக ஆர்வம் இருப்பதாகவும், ஆனால் அண்ணாதுரை அவர்கள் நாடகத்துறையை நம் கொள்கையை கொண்ட துறையாக மாற்ற உழைக்க வேண்டும் எனக் கூறுவதாலேயே, நான் கலைத்துறையில் வேலை செய்வதாகவும் கூறி, தானும் தன் மனைவியும் நம் கழகத்திற்காகத் தியாகம் செய்ய எப்போதும் தயாராய் இருப்பதாகக் கூறி பேலூர் அவர் பேசினார். "அண்ணா அவர்கள் திராவிடர்கழகமும், தி முன்னேற்றக் கழகமும் ரெட்டைக் குழல் துப்பாக்கி என முன்பு கூறினார் ஆனால் நான் கூறுகிறேன் திராவிடர் முகம் ஓர் துப்பாக்கி, நாம் தோட்டா. தோட்டா இல்லாமல் துப்பாக்கிப்பயன்படாது இந்தத் தோட்டாவும் வேறு துப்பாக்கிக்குச் சேராது. திராவிடர் கழகம் என்ற துப்பாக்கியைத் தற்போதைக்கு இரவல் தருபவர் நம் பெரியார். அவரோ வயோதிகர். நமக்கு நிச்சயம் நம் கையில் துப்பாக்கியைக் கொடுக்கத் தன் போகிறார். இப்போதே நாம் அமைப்பு முறையோடு வேலைசெய்தால் சமீபத்திய காலத்தில் நாட்டுப் பிரிவினையை நம்பெற முடியும்" என்று பேசி முடித்தார்.

எம். எஸ். பெரியசாமி

அடுத்தபடியாக தலைவர் எம். எஸ். பெரியசாமி அவர்கள் "ஒரு கட்சி நன்றாக இயங்கவேண்டுமானால் அதற்குப் பணம்தான் முக்கியம் என்றும், அதற்கு மக்கள் தரவேண்டியது மிகவும் முக்கியம் எனவும், அதை உணர்ந்து நீங்கள் பெருவாரியாக இங்கு வந்து உங்கள் ஆதரவைத் தந்திருப்பதற்கு நன்றி செலுத்துவதாகவும் கூறி, நம் கொடுக்கப் போகிற பணமுடிப்பு ரூ. 4001 என்றாலும் அது மிகவும் குறைவுதான். இன்னொரு தடவை இப்படி நாடகம் நடத்துவதாய் இருந்தால், இரண்டு நாடகங்காக நிதி கொடுக்க இங்குள்ளோர் முயற்சிக்கவேண்டும்எனவும், அதற்குத்தானும் ஒத்துழைப்பதாகக் கூறி, பெருத்த ஆரவாரத்திற் கிடையே ரூ. 4001 கொண்ட பணமுடிப்பைகழகப் பொதுச் செயலாளர் அண்ணாத்துரையிடம் அளித்தார்.

என். வி. நடராசன்

பின் தோழர் என். வி. நடராசன் பேசுகையில், "விருதுநகரில் மத்திய திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக நாடகம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டு, நாடகம் முடிந்து நிதி அளிக்கும் இக்கணம் வரைக்கும், ஒவ்வொரு நிகழ்ச்சியும் அமைப்பு முறை விதிகளைத் தழுவி நடத்தப்பட்டதாகவே இருப்பதை அறிந்து மகிழ்கிறேன் என்றும், ரூபாய் 4001 நிதி போதாது எனவும், மேல்கொண்டும் நிதி அளிக்க விருதுநகர் முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு, விருதுநகர் முன்னேற்றக் கழகத் தோழர்களையும், நகரசபைத் தலைவர் தோழர் எம். எஸ். பெரியசாமி அவர்களையும் பாராட்டிப் பேசினார்.

சி. என். அண்ணாத்துரை

கடையிலாக பலத்த கைதட்டலுக்கிடையே அண்ணாத்துரை அவர்கள் எழுந்து பதில் விளித்து பேசியதவது:—

"நீங்கள் கொடுத்த பண முடிப்பு ரூ. 4001. உங்கள் அனைவருக்கும் கழகத்தார் சார்பாக என் நன்றி. ஆனால் இத்தொகை இம்மாவட்டத்துக்குமேயில் நிதி 3700 இது குறைவல்ல. ஏனெனில், தூத்துக்குடியில் நகர சபைத் தலைவரின் ஒத்துழைப்பு கிடையாது. ஆனால், இங்கு நகர சபைத்தலைவரின் ஒத்துழைப்பு மட்டுமல்ல, தலைமையுமாங்கியுள்ளார். வசதியான சூழ்நிலை விருதுநகரில் உண்டு அப்படி இருக்க ரூ 4001 அதிகமாகாது நகர சபைத் தலைவர் பெரியசாமி அவர்கள் அடுத்த தடவை நாடகம் ஆடினால், ரூ. 8000 தருவதாகக் கூறினார். நாடகம் ஆடி ரூ 8000 தரத் தயாராய் இருக்கும்போது, நாடகம் ஆடாமல் அடுத்த தடவை இங்கு வரும்போது, ரூ 1000 நிச்சயம் தருவார் என்று நம்புகிறேன்" என்று கூறி, "இப்போது திரட்டப்படும் நிதி, தலைமை நிலையம் ஏற்படுத்தவும், தலைமை நிலையத்தில் பொறுப்பாளர்கள் நியமிக்கவும், மற்றும் இயக்க வேலை நன்கு நடக்கவும்பயன்படுத்தப்படும என்றும் பேசி முடித்தார்.

முடிவில் நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் 'வேலைக்காரி' பாட்டுகள் பாடிய பின்னர், செயலாளர் நன்றி கூற, நாடக நிகழ்ச்சி இனிது முடிந்தது. (வி-உ)

ஆந்திர மாகாணத்திற்கு அதிகாகள்

சென்னை, ஜன. 4—சென்னை சர்க்கார் மாகாணங்களிலுள்ள சர்க்கார் ஆபீஸ்களுக்கும், ஆந்திர மாகாணத்திற்கு செல்லுவதற்குப்பாராபுளெஜுடிஷியுற்ற ஆபீஸர்களும், செஜுட் ஜுடிஷியலற்ற ஆபீஸர்களைப்பற்றி தங்கள் சேவிஸ்புரூல் ஒரு உத்தரவு பிறப்பித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இதன் பொருட்டு சென்னை சர்க்கார் ஆந்திர அல்லாதவர் பார்க்கின்றதையும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்: விசாகபட்டணம், தெக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர், கடப்பை, சித்தூர், கர்நூல், அனந்தப்பூர், பெல்லாரி ஜில்லாவிலுள்ள தாலுகாக்களில் குடியேறியவர்களைத் தவிர மற்றவர்கள் என்றும் கூறியிருப்பதாகவும் தெரியவருகிறது.

ஆண்டு இறுதிக்குள் மீண்டுமொரு காமன்வெல்த் மாநாடு

ஆஸ்திரேலியா வலியுறுத்தும்

லண்டன், ஜன. 3—இவ்வாண்டு கடைசிக்குள் மற்றொரு காமன்வெல்த் மாநாடு கூட்டப்படவேண்டும் என்னும் எண்ணம் லண்டன், கொழும்பு தவிர வேறு எந்த காமன்வெல்த் நாடுகளின் தலைநகரில் அது கூடப்பெறவேண்டுமென்றும் காமன்வெல்த் மாநாட்டில் ஆஸ்திரேலிய பிரதிநிதியான் டெர் மேபுதுத்தாரென்று தெரிகிறது.

சென்னை மாவட்ட தி. மு. க. முதல் மாநாடு

நாள் :— 22—1—50 ஞாயிறு

நேரம் :— காலை 9-மணிக்குத் துவக்கம்

இடம் :— 'பீப்பிள்ஸ் பார்க்' மிருகக் கண்காட்சி சாலைக்குப் பின்புறமுள்ள மைதானத்தில் 'அழகிரிபந்தலில்'

தலைவர் :— சேலம் ஏ. சித்தையன்

துவக்குபவர் :— மதுரை எஸ். முத்து

இரவு 9-30 மணிக்கு

சி. என். ஏ., கே. ஆர். ஆர். நடிக்கும்

'சந்திரமோகன்' நாடகம் நடைபெறும்

விவரங்கட்கு :— கே. கோவிந்தசாமி,

செயலாளர், சை. மா. தி. மு. க. முதல் மாநாடு

2/45, முத்துமாரிச் செட்டித் தெரு, சென்னை-1.

தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

வீரநாராயணமங்கலம்

வீரநாராயணமங்கலம் (தஞ்சை மாவட்டம்,) டிச. 25—24—12—49 சனிக்கிழமை காலை 8 மணிக்கு இவ்வூர் தி. மு. கழகத் தலைவர் திரு. உலகநாதன் ஏ. அனந்தபெருமாள் அவர்கள் தலைமையில் கடைத்தெரு விழாவுக்கு சுற்றுவட்டாரக் கிராமங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் வந்திருந்தனர். கழகப் பொதுச் செயலாளர் சி. அ. ராஜாராம் அவர்களும் வரவேற்புரை வேலூர். பின்னர் தலைமை முகவுரையாக இவ்வூரில் தி. மு. கழகத்தின் பணி என்ன? பிரச்சாரத்தால் இவ்வூர் மக்கள் ஓளவு சி. ரும் புள்ளானாலும் 'திராவிடர்' என்றுசொல்லிக்கொண்டே வருவதும், மேலும் செய்யும் தொழில், தொழிற்சங்கம், கே. சினிவாசன் சொற்பொழிவுக் கேட்டுச் சிந்திப்பார்களாயின் அவர்களும் அதனாலேயே கொள்கை ஆதரிப்பார்கள் என்றும் மற்றும் கழகத் திட்டங்களையும் சுருக்கமாகக் கூறி, தனது முகவுரையை முடித்துக் கொண்டார்.

பின்னர், தோழர் வள்ளியம் மருமன் அவர்களும், தோழர் மதியழகன் அவர்களும் கழகக் கொள்கைகளை விளக்கி சுமார் ஒரு மணி நேரம் பேசினர்.

டி. கே. சீனிவாசன்

பின்னர், திருச்சித் தோழர் டி. கே சினிவாசன் அவர்கள் ஆற்றிய சொற் பொழிவின் சுருக்கமாவது:—

இந்த நகரில் கழகம் அமைத்து தலைவரை நாடத்த வரிய மூலம், இவ்வூர் மக்கள் ஓளவு சி. ருந்தபுள்ளனர். முன்னேற்றத்தை விரும்புகின்றனர் என்ற ஒரு நிலைமைகண்டமாத்திரத்திலே மிக மிக களிப்படைகின்றேன். மருத்தியாளரையெல்லாம் கண்ட மாத்திரத்திலேயே கடவுள் நிந்திக்கும் கயவர்கள் இவர்கள் என்ற கூறுகின்றனர். இது அவர்கள் அறியாமையைப் காட்டுகின்றது. எனெனில் நம் கொள்கைகளை மாற்றிக் கொள்ளுங்கள் என்று நான் கழகத்திற்குத் தலைமை தாங்கி வழிநடத்தவில்லை. கடவுள் மறுப்பு நிலைப்பதனை—பாதுகாப்பதனைக் கழகத்தின் பணியாகக் கொண்டுள்ளோம் என்பதை மக்களுக்கு நாங்கள் தெளிவாகவே விளக்கி வருகிறோம். இன்னும் விளக்கிக்கொண்டே இருப்போம். எனவேதான் எதையும் ஆராயும் அறிவுள்ள 'அறிவையே கடவுள்' என்று கூறுகிறோம். என்ற சித்தர் பாடல்களில் இவற்றை மேற்கோளாக எடுத்துக்காட்டி விளக்கினர். மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில், மாநாடு மூடக்காரணமும், உழைப்பில்லாமலும் வயிறு வளர்ப்பவர்களின் சூழ்ச்சியால் தான் கொள்கை பெறாத, ஒத்த நிலையை இன்னும் ஏற்படவில்லை என்றும், ஆகவே இது போன்ற நேரங்களில் பகுத்தறிவு மனப் புரிய முன்னேற்றக் கழகங்கள் தோன்றவேண்டும், கூறி, மற்றும் சமூகப் பொருளாதாரக் கொள்கைகளையும் விளக்கி சுமார் 1-30 மணி நேரம் பேசினர். இதற்கிடையில் எழுந்த கேள்விகளும் சரியான பதில் கூறி, இரவு 9 மணிக்கு விழாவில் கலந்து கொண்டதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, தமது சொற்பொழிவை முடித்துக் கொண்டார்.

பின்னர் தலைமை முகவுரையுடன், என். ராமலிங்கம் நன்றி கூற கூட்டம் இனிது கலைந்தது. (வி—உ)

எரிட்ரியா மலேயா ஆகிறதா?

அல்வாரா, ஜன. 4—எரிட்ரியாவில் சென்னைக் கூட்டத்தினர் காலடியில் அதிர்ந்து வருகின்றனர். எரிட்ரியா மறுபடியும் ஏகாதிபத்தியர் ஆதிக்கத்தில் சென்றிருந்தது என்ற கூறப்படுகிறது. இந்த ஆதிக்கம் சமீபத்தில் மிரிட்டிஷ் படைகள் நிலைநிறுத்தப்பட்டிருந்தன.

திட்டமிருக்கிறது சொல்லுகிறோம்; தீரமுண்டா செயலாற்ற?

—(0)—

மனமிருந்தால் மார்க்கமுண்டு

—(0)—

திட்டம் கேட்ட பண்டிதருக்குத் திராவிடம் தரும் பதில்

"கம்யூனிஸ்டுகளுக்குத் திட்டமான கொள்கை ஏதாவது இருக்குமானால், அதை அமுல் நடத்துவது எவ்வளவு தூரம் சாத்தியமென்பது பற்றி நாங்கள் ஆலோசிக்க சித்தமாக இருக்கிறோம். ஆனால், நாட்டில் அராஜகத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்துவதற்கான எந்த நடவடிக்கையையும் நாங்கள் சகித்துக் கொண்டிருக்க முடியாது"

என்று நாகபுரி பொதுக்கூட்டத்தில் பேசியபோது இந்திய பிரதமர் பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார். பண்டிதரின் பேச்சிலிருந்து, அவர் நல்ல முறைக்கு அரசியல், பொருளாதார இயல் ஆகியவற்றை மேற்கொள்ள எண்ணுவதும், அழிவு வேலையை வெறுக்கிறார் என்பதும் தெரியவருகிறது.

திட்டமான கொள்கைகள் ஏதேனும் இருப்பின் அமுல் நடத்த சித்தமாயிருக்கிறார்களாம் இந்திய சர்க்கார். இது தான் இந்திய சர்க்கார் சார்பிலின்றி அதன் முதலமைச்சர் என்ற முறையில் பண்டிதரும் விடுக்கும் செய்தி.

"திட்டமான கொள்கைகள் ஏதேனும் இருக்குமானால்" என்று சொன்னதிலிருந்து அத்தகைய கொள்கைகள் கம்யூனிஸ்டுகளிடமில்லை என்று அவர் கருதுகிறார் போலும் பண்டித நேரு. சரி, கம்யூனிஸ்டுகளிடம் திட்டமில்லையென்றே வைத்துக் கொள்வோம். ஆனால் கம்யூனிசம் என்னும் தத்துவம் வகுக்கப்பட்ட கொள்கைகளைக் கொண்டது என்பதை நேரு அறியாரா? [illegible]

[illegible]

"[illegible] இனிமேல் ஆலோசிக்கவோ [illegible] வேண்டியதில்லை!

[illegible]

கிழக்கு-மேற்கு தகராறு தீருமா?

லண்டன், ஜன. 4—

இவ்வாண்டில் தென்கிழக்கு ஆசியா உலக கவனத்தைக் கவரும் என்று பிரபல விமர்சகர் வெர்னன் பார்ட்லெட் கூறுகிறார்.

அவர் கூறுவதாவது:—

கிழக்கு—மேற்கு தகராறு தீரும் என்பதற்கான அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை. யூகோஸ்லேவியாவில் கம்யூனிஸ்டு கொரில்லாக்கள் இவ்வாண்டு தங்கள் கைவரிசையைக் காட்டலாம்.

1949-ல் அணுகுண்டு கண்ட்ரோல் விஷயமாக அமெரிக்காவும், ரஷ்யாவும் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுக்காமல் இருந்தது இவ்வருஷத்தில் ஒரு முடிவுக்கு வரலாம்.

பிரஸிடெண்ட் ட்ரூமனின் 4 அம்ச திட்டம் இவ்வருஷம் அமுல் நடத்தப்படலாம்.

பால்டிக்கில் ரஷ்ய கடல் தளம்

பெர்லின், ஜன. 4—

பால்டிக்கில் மெக்லென்பர்க் என்ற இடத்தில் ரஷ்யா கடல் தளத்தை ஏற்படுத்தி, பெரும் அளவில் அபிவிருத்தி செய்து வருகிறது என்ற செய்தி பற்றிய விவரங்கள் இப்பொழுது கிடைத்திருக்கின்றன.

சென்ற வருஷம் அந்த தளத்தில் 27000 பேர் வேலை செய்தனர் என்றும், 60,000,000 மார்க்கள் இதற்காக செலவழிக்கப்பட்டன வென்றும், ரஷ்ய ஆதிக்கத்திலுள்ள ஜெர்மன செய்தி நிலயம் கூறுகிறது.

யு. எஸ். கீழ்க்கோடி கொள்கை என்ன?

லண்டன், ஜன. 4—

யுனைடெட் ஸ்டேட்ஸின் கீழ்க்கோடி கொள்கை விஷயமாக இதுவரை ஒப்பந்தம் [illegible] தெரியவில்லை என்று 'குளோப்' கூறுகிறது.

[illegible]

திட்டமிருந்தால் சொல்லுங்கள் என்று கம்யூனிஸ்டுகளை நேரு கேட்கிறார். [illegible] திட்டமிருக்கிறது சொல்லுகிறோம்; தீரமுண்டா செயலாற்ற?

சோவியத் கலகக்கார பொருளாதார அமைப்பை ஆய்கிறார் மாசேதுங்

—(0)—

சீனப் பெருநிலத் தலைவரின் ரஷ்ய சுற்றுச் செலவு

—(0)—

நாட்டுச் சீரமைப்புக்குக் கடன் தொகை பெறவும் ஏற்பாடு

கம்யூனிஸ்டு சீனாவுக்குக் கடன் தொகை வழங்க ஸ்டாலின் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. சீனக் கம்யூனிஸ்டு சர்க்கார் தலைவர் மாசேதுங் 'டாஸ்' செய்தி நிலயப் பிரதிநிதிக்களித்த பேட்டியொன்றில் இதை வெளியிட்டிருக்கிறார்.

டிசம்பர் மத்திவரை மாஸ்கோவில் தங்கியிருந்த மாசேதுங், 1945-ல் ஏற்படுத்திக் கொண்ட சீன—ரஷ்ய நேச ஒப்பந்தத்தை வலுப்படுத்திக் கொள்வது பற்றி ஸ்டாலினுடன் தான் விவாதித்ததாகவும், வியாபார ஒப்பந்த மொன்று செய்து கொள்வது பற்றியும் பேச்சு நடைபெற்றதாகவும் குறிப்பிட்டார்.

சீனத் தலைவர் மாசேதுங் மேலும் பல வாரங்கள் ரஷ்யாவில் தங்குவாரென்று தெரிகிறது. சீன மக்கள் குடியரசுக்கான நல்ல திட்டங்களை தீட்டும் பெருமுயற்சி நிறைவேறி ஒரு முடிவேற்படும் வரையில் அவர் தங்கலாமெனத் தெரிகிறது.

சீனாவில் இராணுவ நிலை மிகவும் நன்றாகவே இருந்து வருவதாகவும், அமைதியான முறையில் பொருளாதார சீரமைப்பு வேலைகள் ஆரம்பமாகி யிருக்கின்றனவென்றும் மாசேதுங் மேலும் குறிப்பிட்டார்.

சீனாவுக்குத் திரும்புமுன், மாசேதுங் யு. எஸ். எஸ். ஆரைச் சேர்ந்த பற்பல மாவட்டங்களையும் நகரங்களையும் சுற்றிப் பார்வையிடுவாரெனத் தெரிகிறது. சோவியத் நாட்டின் பொருளாதார—கலாச்சார அமைப்பு முறைகளைக் கண்டறிவதே அவரது சுற்றுப் பயண நோக்கமாகுமென்று கூறப்படுகிறது.

நியூயார்க், ஜன. 4—

அமெரிக்காவில் [illegible]

தேசீயரசாயன ஆராய்ச்சி நிலயம்

புதுடில்லி, டிச. 29—

பூனாவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இந்திய தேசிய ரசாயன ஆராய்ச்சி சாலையை இந்தியப் பிரதம மந்திரி பண்டித நேரு 1950 ஜனவரி 3-ல் திறந்து வைக்கிறார். நாட்டின் பல்வேறு பகுதிகளில் இந்திய சர்க்காரால் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் 11 தேசிய ஆராய்ச்சிசாலைகளில் இதுவே முதலாவதாகும். டாக்டர் சாந்தி ஸ்வரூப் பட்நாகரை டைரக்டராகக் கொண்டு, 1940-ல் அமைக்கப்பட்ட விஞ்ஞான—தொழில் ஆராய்ச்சி போர்டின் ரசாயனப் பிரிவே இப்பொழுது இந்த ஆராய்ச்சி நிலயமாகப் பரிணமித்திருக்கிறது. இந்த நிலயம் உலகத்தின் தலைசிறந்த ஆராய்ச்சி கூடங்களில் ஒன்றாக விளங்கும் வகையில் சகல சாதனங்களும் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கிறது.

விஞ்ஞான அறிவு தொழில் துறையில் பயன்படும்படி செய்வதே தேசீய ரசாயன ஆராய்ச்சி சாலையின் பிரதான அலுவலாகும். [illegible]

[illegible]

விஞ்ஞான-தொழில் ஆராய்ச்சி போர்டைச் சேர்ந்த ஆராய்ச்சி [illegible]

கழக உறுப்பினர் சேர்க்கும் வாரம்

14—1—50ம் நாளிலிருந்து 20—1—50ம் நாள் முடிய உள்ள "பொங்கல் வாரத்தை" முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சேர்க்கும் வாரமாகக் கொண்டு, நடு நெங்கும் கழக உறுப்பினர்களைச் சேர்க்கும்படி, ஆர்வமுள்ள கிளைக் கழகத் தோழர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாண்டில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஒரு இலட்சத்திற்குக் குறைவில்லாமல் காட்ட கழகத் தோழர்கள் தங்கள் கடமையைச் செய்ய வேண்டுகிறேன்.

31—3—50க்குள் உறுப்பினர்கள் சேர்த்தல் முடிந்துவிடவேண்டுமாதலால், உடனடியாக அச்செயலை நிறைவேற்றித்தரத் தோழர்கள் முந்துற வேண்டும்.

உறுப்பினர்கள் சேர்க்கும் இரசீது புத்தகங்களை அந்தந்த மாவட்ட அமைப்பாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். மாவட்டக் கழகம் அமைந்துள்ள மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் மாவட்டக் கழகச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

என். வி. நடராசன்,
செயலாளர் — அமைப்புக் குழு.

இந்திய ரயில்வேக்களின் கடந்தவாண்டு சாதனை

—(0)—

118 கோடிப் பிரயாணிகள்; 8 கோடி டன் சரக்குகள் ஏற்றிச் சென்றன

—(0)—

ரயில்வே போர்டின் 1948-1949ம் ஆண்டு அறிக்கை

புதுடில்லி, ஜன 5 — போக்குவரத்துப் பெருக்கம், வருமான அதிகரிப்பு, நிர்வாகத் திறமையில் அபிவிருத்தி ஆகியவை 1948-49-ம் ரயில்வே நிர்வாகத்தில் காணப்பட்ட முதன்மையான அம்சங்களாகும். ரயில்வே போர்டின் 1948-49-ம் வருஷ அறிக்கை இப்பொழுது வெளியாகியிருக்கிறது. பிரிவினைக்குப் பிறகு, முதல் நிதி வருஷமான இவ்வாண்டில் இந்திய ரயில்வேக்கள், பிரயாணிகள் எண்ணிக்கையிலும், பிரயாணிகளை ஏற்றிச் சென்ற மைல்களின் அளவிலும், பிரயாணிகள் சரக்குகள் போக்குவரத்தின் மூலம் சம்பாதித்த தொகையிலும், புதிய தொரு உச்சத்தை எட்டியிருக்கின்றன. நிர்வாகச் செலவு 1947-48ல் மொத்த வருமானத்தில் 91.4 சதவிகிதமாக இருந்தது. 1948-49-ல் 79.0 சதவிகிதமாகக் குறைந்து விட்டது. திருப்திகரமான இந்தப் பலன் கிடைத்திருப்பதற்கு, நிர்வாகத் துறையில் ஏற்பட்ட அபிவிருத்தியே முக்கியக் காரணமாகும். சரக்கேற்றப்பட்ட வாகன்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்திருக்கிறது. இவ்வாண்டின் இறுதி மாதங்களில் வாகன்களின் எண்ணிக்கை வெகு துரிதமாக அதிகரித்திருக்கிறது. "போக்குவரத்து நெருக்கடிகள்" பற்றி பிரஸ்தாபிப்பது வருஷ ஆரம்பத்தில் வெகு சகஜமாக இருந்து வந்தது. வருஷம் முடியும்போது இவை பற்றிய பிரஸ்தாபமே இல்லாமலிருந்தது. ரயில்வே போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திக்கு மற்றொரு அறிகுறியாகும்.

வரவு செலவு

இந்திய சர்க்கார் ரயில்வேக்களுக்கு 1948-49ல் கிடைத்த மொத்த வருமானம் 233.10 கோடி ரூபாய் இந்தத் தொகையில் 83.83 கோடி ரூபாய் பிரயாணிகள் போக்குவரத்து மூலமாகவும் 108.29 கோடி ரூபாய் சரக்குகள் போக்குவரத்து மூலமாகவும், பாக்கியுள்ள பணம் இதர வருமானங்கள் மூலமாகவும் கிடைத்திருக்கிறது. ரயில்வேக்களின் முறையான நிர்வாகச் செலவு 160.41 கோடி ரூபாய் ஆகியது. தேய்மான நிதிக்கு 11.29 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்திய ரயில்வேக்கள் நிர்வகித்து வந்த, இந்திய சர்க்காருக்குச் சொந்தமல்லாத ரயில்வேக்கள் நிர்வகித்து வந்த, இந்திய சர்க்காருக்குச் சொந்தமல்லாத ரயில்வே ஸ்தாபனங்களுக்கு நிகர வருமானத்தில் 1.63 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. இதர செலவினங்கள் மூலம் 2.56 கோடி ரூபாய் நிகர வருமானம் கிடைத்தது. ஆகவே இவ்வருஷம் கிடைத்த நிகர வருமானம் 42.34 கோடி ரூபாய். இதில் வட்டிக்காக 22.36 கோடி ரூபாய் செலுத்தப்பட்டது போக, பாக்கி, 19.98 கோடி நிகர லாபமாகக் கிடைத்தது.

இந்திய சர்க்கார் மூலதனம் போட்டிராத ரயில்வேக்களும் உட்பட, இந்தியாவிலுள்ள எல்லா ரயில்வேக்களையும் மொத்தமாக எடுத்துக்கொண்டு கணக்கிட்டால் 1948-49ல் இந்திய ரயில்வேக்களின் மொத்த வருமானம் 233.83 கோடி ரூபாயாகிறது. இதில் 112.26 கோடி ரூபாய் அல்லது 48 சதவிகிதம் சரக்குகள் போக்குவரத்து மூலமாகக் கிடைத்தது, 92.91 கோடி ரூபாய் அல்லது மொத்த வருமானத்தில் 39.7 சதவிகிதம், பிரயாணிகள் போக்குவரத்து மூலம் கிடைத்தது. மிகுதியுள்ள 28.66 கோடி ரூபாயும் அல்லது மொத்த வருமானத்தில் 12.3 சதவிகிதம், பார்சல்கள், லகேஜுகள் இதர இனங்கள் ஆகியவை மூலமாகக் கிடைத்ததாகும்.

போக்குவரத்து அதிகரிப்பு

1948-49 வருஷத்தில் இந்திய ரயில்வேக்கள் மொத்தம் 118.06 கோடி பிரயாணிகளை ஏற்றிச் சென்றிருக்கின்றன. பிரயாணி மைல்கள் பிரகாரம் கணக்கிட்டால் பிரயாணிகள் போக்குவரத்து மொத்தம் 3876.5 கோடி பிரயாணியும் சராசரி 32.8 மைல் தூரம் பிரயாணம் செய்திருக்கின்றனர். 1948-49-ல் மொத்தம் 8.25 கோடி டன் எடையுள்ள சரக்குகளை இந்திய ரயில்வேக்கள் ஏற்றிச் சென்றிருக்கின்றன. டன்—மைல் கணக்கில் இது 2264.8 கோடி டன்—மைலாகிறது. ஒரு பிரயாணி மைலுக்குக் கிடைத்த சராசரி வருமானம் 4.6 பைசா; ஒரு டன்—மைலுக்குக் கிடைத்த வருமானம் 9.5 பைசா.

பிரிவினைக்குப் பிறகு அமைக்கப்பட்ட கிழக்கு பஞ்சாப், அஸ்ஸாம் ரயில்வேக்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், 1948—49ம் வருஷக் கணக்கை 1947—48ம் வருஷக் கணக்குடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த வருஷம் பிரயாணிகள் போக்குவரத்து வருமானம் 9.8 சதவிகிதமும், பிரயாணிகள் எண்ணிக்கை 7.6 சதவிகிதமும், பிரயாணி—மைல்கள் 8.9 சதவிகிதமும் அதிகரித்திருக்கின்றன. பிரயாணிகள் போக்குவரத்து, 1938-39-ம் வருஷக் கணக்குடன் ஒப்பிடும்போது, 1947-48ல் 124.4 சதவிகிதமாக அதிகரித்திருந்தது; இந்த வருஷம் இது மேலும் அதிகரித்து 151.5 சதவிகிதமாகிவிட்டது. இந்திய ரயில்வேக்களில் இதற்கு முன் எந்த வருஷத்திலும் இவ்வளவு பிரயாணிகள் பிரயாணம் செய்ததே இல்லை.

சரக்குகள் போக்குவரத்தும் முந்திய வருஷத்திலிருந்ததைவிட 8.6 சதவிகிதம் அதிகரித்திருந்தது. நிகர டன்-மைல் கணக்கும் 8.5 சதவிகிதம் உயர்ந்திருந்தது. 1938-39ம் வருஷத்துடன் ஒப்பிடும்போது டன்-மைல்கள் எண்ணிக்கையில் ஏற்பட்டிருந்த உயர்வு 21.5 சதவிகிதமாகும். பிரிவினை ஆண்டில் நடைபெற்ற சரக்குகள் போக்குவரத்தும் மதிப்பிட்டுப் பார்க்க வேண்டியிருந்தது, ஏற்றிச் செல்லப்பட்ட சரக்குகளில் 43.6 சதவிகிதம் நிலக்கரியென்றும், 10.9 சதவிகிதம் தானியப் பொருள்கள் என்றும், 2.5 சதவிகிதம் எண்ணெய் வித்துக்கள் என்றும் தெரிய வருகிறது.

நஷ்டஈடுகள்

ரயில் மார்க்கமாக அனுப்பப்படும் சரக்குகளுக்கு நஷ்டம் அல்லது சேதம் ஏற்படுவது காரணமாகக் கோரப்படும் நஷ்ட ஈடுகளைத் துரிதமாகப் பைசல் செய்யவும், ரயிலில் அனுப்பப்படும் சரக்குகளுக்கு சேதமோ நஷ்டமோ ஏற்படாமல் தடுக்கவும், 1949 ஜனவரி முதல் தேதியிலிருந்து ஒரு தீவிர இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. சரக்குகளை சரிவரக் கட்டி, விலாசங்களைத் தெளிவாக எழுத வேண்டுமென்று நாடு முழுவதிலும் விளம்பரங்கள் மூலம் ஒரு தீவிர பிரசார இயக்கத்தை நடத்தியதன் மூலம், இவ்விஷயத்தில் பொதுஜனங்களின் ஒத்துழைப்பு நாடப்பட்டது.

மூலதனச் செலவுகள்

இந்திய ரயில்வேக்களில் போடப்பட்டுள்ள மூலதனத்தின் மொத்த மதிப்பு 1949 மார்ச் இறுதியில் 775.77 கோடி ரூபாயாக இருந்தது. இதில் 701.89 கோடி ரூபாய் இந்திய சர்க்கார் ரயில்வேக்களின் மூலதனமாகும். மீதமுள்ள 73.88 கோடி ரூபாயும் இந்திய சமஸ்தானங்கள், கம்பெனிகள், ஜில்லா போர்டுகள் முதலியவற்றிற்குச் சொந்தமான ரயில்வேக்களின் மூலதனமாகும். இந்திய ரயில்வேக்களின் மூலதனத்தில் பெரும் பகுதி, அதாவது 699.78 கோடி ரூபாய் இந்திய சமஸ்தானங்கள் முதலியவை போட்டுள்ள மூலதனமாகும்.

போகிற போக்கில்...!

'போசிலில் காலங்கழிக்க மல் செயலில் இறங்குக: அரவிந்த ச்ரம அன்னையின் புத்தாண்டுச் செய்தி'

—செய்தித்தலைப்பு

செயலில் இறங்க வேண்டியது கூட அவ்வளவு அவசியமாகப்படவில்லை; மௌனத்தில் இறங்கி, மறைவில் வாழ்வதே உத்தமம்! நாட்டை ஆத்மீகத் துறையில் அபரிமிதமாய் முன்னேற்றி அதன் வழி மோட்ச சாம்ராஜ்யத்தை வெட்டிப் பிடிக்க இதுவே மார்க்கமென்றும் கருதப்படுகிறது!

* * *

'விஞ்ஞான ரீதியில் வாழ்க்கைப் பிரச்னைகளை அணுகும் மனப்பாங்கை உண்டாக்குக!
—டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி

மகாசபை முகர்ஜியா இப்படிப் பேசுவது! தெய்வத்துக்கு அடுக்குமா இந்த நினைப்பு! விஞ்ஞான ரீதியில் வாழ்க்கைப் பிரச்னைகளை ஆராய்ந்தால், நமது புனிதமான இந்துமதம் என்னவது—நமது அருபெரும் கடவுளர் கள் என்னவது—இன்னும் மற்ற 'கிரியாம்சைகள்' என்னவது? டாக்டர் சார், இதையெல்லாம் சிந்தித்திருக்க வேண்டாமா? ஏதோ சந்தர்ப்பத்துக்கேற்ப பேசி விட்டால், பின்னர் விளைவுகள் விபரீதமாகி விடாதா?

* * *

'பத்திரிகை ஆசிரியர் ஆபீஸ் அறையில் இறந்து கிடந்தார்'
—செய்தித் தலைப்பு

வேலை நேரத்தில் இப்படி இறந்து கிடக்கலாமோ? சம்பளத்தை வாங்கிக் கொண்டு, செத்துக்கிடக்கவா வேலைக்கு வந்தார்! என்ன அநியாயம்!

* * *

"தேசத்தின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க அதிக தியாகம் செய்ய வேண்டும்"
—மந்திரி ஜகஜீவன்ராம்

இது என்ன பிரமாதம். செய்துவிட்டால் போகிறது! எந்தக் கம்பியை அறுக்கவேண்டும்? எந்த ஆபீஸைக் கொளுத்த வேண்டும்?—வரையறுத்துக் கூறிவிடுங்கள், லட்சக்கணக்கில் தியாகிகள் ஏற்பட்டுவிடுவார்கள்!

* * *

"கள்ளமார்க்கெட்காரர்களை வெறுத்துத் தள்ளுங்கள்"
—மந்திரி ஜகஜீவன்ராம்

பொதுத் தேர்தல் தன் நெருங்கி வந்துகொண்டிருக்கிறதே! பொதுமக்கள் இனி ஏமாந்து போய்விடுவார்கள்!

* * *

"திருப்பதி கோயில் அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்தது. இதனால் இதனை இந்திய நிர்வாகத்துக்குட்பட்ட கோயிலென அறிவிக்க வேண்டுமென இந்திய சர்க்கார் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்"
—வைஷ்ணவ மாநாட்டுத் தீர்மானம்

இமாலயத் தவறு செய்துவிட்டனர் வைஷ்ணவ மாநாட்டார்! அண்டபிண்ட சராசரங்களையும் தன்னுள்ளடக்கிய வெங்கடேசப் பெருமாள், இந்திய நிலப்பரப்பில் மட்டுந்தான் செல்வாக்குடையவரா, என்ன? சர்வதேசியமயமாக்கப் பெற வேண்டிய பரம்பொருளல்லவா, அவர்! ஸ்ரீவைஷ்ணவப் பக்தகோடிகளுக்கு இது தெரியாமற் போனதேனோ, கோவிந்தா! ஐக்கிய நாடுகள் தர்மகர்த்தா கவுன்சிலுக்கு அனுப்ப வேண்டிய பிரச்னையன்றோ இது! போகட்டும் அறியாமற் செய்த பிழையை 'ஆபத்பாந்தவன்' பொறுத்துக் கொள்வான். ஸ்பெஷல் மாநாடொன்று கூட்டியாவது, ஐ. நா. தர்மகர்த்தா கவுன்சிலுக்கு விண்ணப்பித்துக் கொள்ளும் தீர்மானத்தை நிறைவேற்றுவது உசிதமான காரியமாகும். தீர்மானத்தின் ஒரு 'காப்பியை' திருப்பதி வெங்கடேச பெருமாளுக்கும் அனுப்பிவைக்க வேண்டியது மறக்கக்கூடாத சங்கதியாகும்!

தி. மு. க. பொதுக் கூட்டங்கள்

7-1-50

சென்னை 10-வது வட்டம் :—		சி. பி. சிற்றரசு, என். வி நடராசன், காஞ்சி மணிமொழியார்

8-1-50

புளியம்தோப்பு :—		இரா. நெடுஞ்செழியன்
திருச்சி :—	(காலை)	சி. என். அண்ணாத்துரை, என் வி. நடராசன், கே. ஏ. மதியழகன்
காரைக்குடி :—	(மாலை)	சி.என். அண்ணாத்துரை என். வி. நடராசன், பி. பழனிச்சாமி
கீழத்தாயில்பட்டி :—		எம். எஸ். சிவசாமி, இரா. ச. தங்கப்பழம் விருதை. எம். இளஞ்செழியன்
தொண்டயம்பட்டி :—		மதுரை மன்னன், எம். எஸ். ராமசாமி, எஸ். முத்து, எம். அய்யாசாமி

மக்களைக் கலங்க வைக்கும்..!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளதெனக் கருதுபவர்கள் மக்கள் வந்துவிட்டனர்!

மரணங்களின் கதை இப்படியிருக்க மத்தியில் மட்டும் என்ன வம்றிறது! ஒஞ்ச ஆழல், நிறையின்மை, சுற்றத்தார் பட்சபாதம் இவை பிறதானே அங்கும் காட்சியளிக்கிறது! காங்கிரஸின் எஃகுமனிதர்கள் அதனை இயக்குகிறார்கள் அவ்வாட்சி எப்படி? ஐ.ர்புரித்த கொடுமைகள் ஒவற்றுக்கு ரான் எம்மாத்திரம்? இக்கால ஹிட்லர்கள், மூலே லினிகளுக்கு இருந்ததில் பத்து வீ சதத்தில் ஒரு பங்கு இறமையாவது இருக்குமா?

அதிர வேட்டை ஆட்சி வெறிபிடித்த மக்களும்டி அச; மூனே பலமும் அறிவும் ஸ்திரமும் இல்லாத காரணத்தால், எந்தப் பிரச்னையும் தீர்க்கக்கூடிய எத்தகைய திறமைமடம் அவர்கட்கு இல்லை! மதனுள் ஒரு திட்டம் கொண்டுவருகிறார்கள்; அடுத்த நாள் அதனை ஒதுக்கித்தள்ளிவிட்டு, இன்னுமொன்றை புகுத்துகின்றனர் முதலை ஒரு அறிக்கை விடுகின்றனர்; மறுநாளே அதனை மறுக்கின்றனர். உண்மையுருவங்களின் அன்றாட நடவடிக்கைகள் இவை!

ஊழலேயில்லாக் குற்றச்சாட்டுக்களில்லை ஒன்றை; நூற்றுக் கணக்கான உதாரணங்களை எடுத்துக்காட்டமுடியும் இந்த சட்டசபை தொகுப்பு மதிப்பீட்டில் அவர்கள் அடித்த 'பல்டி' தேசியமயமாக்கும் பிரச்னைகளும், பொருளாதாரக் கொள்கைளும் இறக்குமதி—ஏற்றுமதிக் கொள்கை, சர்க்கரைப் பிரச்னை, கொவுக் கொள்கையில் இழுத்த தவறு, ரெவின்யூ மெயில் பூசல், ரயில்வேக்களில் வகுப்புப் பிரிவினை கலாட்டா, எகதிள் பிரச்னை இன்றைய ஒவ்வொரு பிரச்னையிலும், சிறியது பெரியது என்ற அனைத்திலும் இவர்கள் போக்கு எதுகுந் தெரியாதா என்ன!

பப்ளிக் சர்வீஸ் கமிஷன் என்பது வெறும் காட்சி மாகவே ஆய்விட்டது; மந்திரிகளின் உற்றார் உறவினர்களின் ஏகபோக ஆதிக்கச் சொத்துக் ளாகிவிட்டன சர்க்கார் உச்சியோகங்கள். பொதுவுலம் போல, வியாபார 'பெரும' 'கள் எளிதில் வாங்கி விற்கப்படுகின்றன. நீதி இலாகாவிடமே இன்னும் கைவைக்கப்பெறாமலிருப்பது வருதற்கரியதே; ஆனல் எத்தனை காலைக்கு? அதனையும் இவ்வுழல் குழாத்தினர் இணைத்து முடிச்சுப் போட முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சுருங்கக் கூறுமிடத்து, காங்கிரஸ் தலைவர்கள் காப்பாற்றத்தக்க, சிரழிக்காத, ஊழல்படுத்தாத ஒரு துறை இலாகாவாவது இன்றைய பொதுவாழ்வில் இல்லையாது!

காங்கிரஸ் தலைவர்கள் மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டனர்; யதேச்சாதிகாரம்பல இவிடனர். தங்களுக்கு மருன பேச்சுகளும், நடவடிக்கைகளுமே தீவிரத் தடைபோட்டுவிட்டார். ஜனநாயகத்தைப்பற்றி வானளவப் பேசுகிறனர்; ஆனல் அதே நேரத்தில் சர்வாதிகாரிளுரை 'ரஸ்ட்' சப்பு வருகின்றனர். பேச்சரிமை—எழுத்துரிமை என்று என்னென்னவோ எதிர்த்தே தென்றன; ஆனல் அதே நேரத்தில் 'அவசர நிலை' என்ற பெயரில், அனை யணைத்துக்கும் தடை விதிக்கின்றனர். மகாத்மா சார்பற்ற கொள்கையுடையோ மென பறைசாற்றுகின்றனர்; ஆனல் அதே நேரத்தில் சர்க்காரின் பெரும் பதவிய ளர் பலரும் மத சம்பந்தமான பண்டிகைகள்-விழாக்கள் முதலியவற்றிலெல்லாம் பெருப் பங்குபூண்டொழுகுகின்றனர்;

சர்க்காரின் அரசியல் தலைவரே விடுதலைவிழா நாளன்று கோயிலில் அர்ச்சனை புரிகிறார்!

இவர்கள் எண்ணந்தான் என்ன? இந்தியாவைக் கொண்டு இவர்கள் செய்ய நினைப்பதுதான் என்ன? அணுவுக் கணுவு பட்டினி வதிடுலட்சாதி லட்சம் ராளி மக்கள் மீது இவர்களுக்கு இஞ்சிற்றும் கருணையிலையா? மனித சகதிஞுக்கு பரியாதை சாட்டவேண்டுமென்ற எண்ணம் ஒறிதும் இவர்களுக்கு இலேய? அரசி வில்லுப் மும், பொருளாதாரத் துறையிளறுடியும் ஏற் டுத்தி தள்ள நிலைகண்டு, இவர்கள் ணப்பட வேண்டாமா?

இவர் ளின் கொடுமையினையும் புரைப்பட ஆட்சியையும் மக்கள் நிரம்ப சகித்து விட்டனர். இத்த சர்க்காரில் மக்களுக்கு சலிப்பு தட்டிவிட்டது. அச்சாரியார் இருபனாளியைப்போல், பெருப் பான்மையோர் கனப்பும், கவலையுமுற்றுவிட்டனர். ஆகவே இன்று, தங்களது பட்டினிக் குரலில், அவல கவலியில், வீ ற்ற நிலையில், வேறு வழி வகை தெரியாது சும்மில் இந்தியாவின் மூபது கோடி மக்களின் ஒருமித்துக் கூறுகின்றனர்; கடவுள் பெயரால், காந்தி பெயரால் வெளியேறுங்கள்" என்று. ஆ சிபீடத்தமர்ந்திருக்கு டியாருக்கு நாம் விடுத்தே தொள்ளும் புத்தாண்டுச் செய்தி இதுவேதானகுமென் தைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். கோபத்தைக்காட்டிலும், அதிக வருத்தத்தோடே இதனை வெளியிடுகிறோம். —பிளிஸ்

கடலூருக்கருகில் 'லிக்னைட்'

கடலூருக்கருத்த சோனேரில் சுமார் 10 அடி னமுள்ளலிக்னைட்டுகள் பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. 'லேண்டு நிட்டம்' என்றொன்றை சென்னை சர்க்கார் மேற்படி சோனத்தில்நிறை வேற்றியருவதாகவும், அப்பகுதி வதண்ட இக்கோ எனர்க்கு எரும்ப் னைதான் தேவையும் பெட்டிட்டு வேலை செய்தவருவதாகவும், இச்சலிக்னைட் கடி தெரிகிறது. குறிப்பாக சோனேரைத் சுற்றிலும் 250 அடி பரப்பில் மேற்கட்டி நடப்பட்டதாம்.

தீராவிட முன்னேற்றக் கழக நிதிக்காக

ஈரோட்டில்

'சந்திரமோகன்'

13-1-50 வெள்ளியன்று, இரவு 10-மணிக்கு

அர்ச்சுனன் அரங்கில் நடைபெறும்

தோழர்கள்

சி. என். அண்ணுதுரை, கே. ஆர். ராமசாமி, ச. வே. சி சம்பத்

ஆகியோர் டிப்பர்கள்

விவரங்களுக்கு:— S. R. சந்தானம்,

மண்டி, ஈரோடு.

சென்னை மாவட்ட தி. மு. க. மாநாடு

தொண்டர் படை அமைப்பு

இம்மாநாட்டின் தொண்டர் படை அமைப்புக்கான கூட்டம் 10—1—50 செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்கு 'மாலை மணி' அலுவலகத்தில் (மூர்மார்க்கெட்டுத் தெரு, 2/45 இல்ல) நடைபெறும். தாழ்மையுள்ள தோழர்கள் அனைவரும் வந்து தங்கள்பெயர்களைத் தொண்டர் படையில் பதித்து கொள்ளவேண்டுகிறேன்.

ஏ. ஆர். சேஷாசலம்,
தொண்டர் படைத் தலைவர்.

இனி நடப்பவை

சென்னை—2 வ. உ. சி. நகர் மத்திய அரசுப்பேட்டை மத்தியக் கட்டிடத்தில், 8—1—50 ஞாயிற்றுக்கிழமை மாலை 10 மணிக்கு செயற்குழுக் கூட்டம் கூடவேண்டும். அதற்கான நேரம் தவறி "தி. மு. க." என மாற்றுவது பற்றியும் கடந்த ஆண்டு அறிக்கையும், புத்தாண்டுக்கும் புதுக்குழு தேர்தல் பற்றியும் ஆலோசிக்கவும். ஆகவே, உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வரவேண்டுமாய் தோழர் செயலாளர் கே. இளஞ்சேரன் தெரிவித்திருக்கிறார்.

* * *

சென்னை புதுப்பேட்டை—7-1-50 சனிக்கிழமை மாலை 6½ மணிக்கு 31-வது வட்டம் தி. மு. கழகக் கட்டிடத்தில் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் கூடவேண்டும் என்றும் 8—1—50 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கும் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் கூடவேண்டும். இக் கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர் (புதிய ஆண்டிற்கு) தேர்ந்தெடுத்தலும், இன்னும் சில முக்கிய விஷயங்களைப் பற்றியும் எடுத்து பேசப்படும். ஆகவே, உறுப்பினர்கள் யாவரும் முன்னதாகவே கூட்டங்களுக்கு நேரமே அனுப்பாகச் சொண்டு குறித்த நேரச் செயலாளர் தோழர் எஸ். டி. ராஜன் வேண்டுகிறார்.

* * *

சென்னை:— 7—1—50 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சென்னை பாரதிவேடசங்கம் மத்திய தெரு இருவல்லிக்கேணி நிலையில் நடைபெறவிருக்கும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் 10-வது வட்டம் தவறாமல் கலந்துகொண்டு மணிமொழியார் நிலையை வெற்றி பெறச்செய்யுமாறு தோழர்கள் ஜி. பி. சித்தன், எஸ். வி. ராஜன் ஆகியோர் கேட்டுக்கொள்கிறார்கள்.

* * *

ஆலந்தூர்:— 8—1—50 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணிக்கு ஆலந்தூர் நிலையத்தில் தோழர் செல்வி அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். அதில் தோழர்கள் அண்ணுதுரை, கே. ஆர். ராமசாமி, ச. வே. சி சம்பத் ஆகியோர் பேசுவார்கள்.

விமான நிலையத்தில் பிராமணர்களுக்கு 'ஹாண்டல்'!

லண்டன், ஜன. 6—விமானமூலம் வந்திருக்கும் பிராமணர்கள் விமான நிலையத்திலேயே தங்களிஷ்ட தங்க ஒரு தனி இடம் கட்ட உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்பாதிரி எந்த இதரை உலகில் எங்கேயும் எற்படுத்தப்படவில்லை.

இக்கொழுத்த பிராமணர்களும் மற்றும் பிராமணர் இல்லாத மூன்று பாட்கள் தங்களிஷ்டமான விமான நிலையத்திலேயே இருக்க வேண்டியிருக்கிறதாம். அந்த பிராமணர் ஹாண்டலில் பிராமணரை மதிக்கும் பியூனர்கள், சர்வாடை லவரிகள் நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம்.

இல்லத்தில், தி. மு. மு. க. ஆய்வுக்கட்டம் ரை செய்தல். அதே போது பல முக்கிய பிரச்னை பற்றியும், உறுப்பினர் கடமை குறித்தும் புலவர் மணி எழில் பேசுவார்கள். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வரவேண்டுமென செயலாளர் சம்பிரமணியன் அறிவித்துள்ளார்.

* * *

சென்டம்பட்டி:— இவ்வூர் தி. மு. க. தலைவிழாம் பொதுக்கூட்டம், மாதா மைதானத்தில் 8—1—50 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணி அளவில் கூடவேண்டும். அதற்கான தோழர்கள் மதனகோபால், எம். எஸ். ராசாமி, எஸ். முத்து, எஸ். தங்கசாமி ஆகியோரும் மற்றும் பல தோழர்களும் பேசுவார்கள்.

* * *

ஆத்தூர்:— ஆத்தூர் தாலுகா தலைவர் கட்டிடத்தில் 8—1—50 ஞாயிறு மாலை 10 மணிக்கு உறுப்பினர்கள் கூட்டம் கூடவேண்டும். அதற்கான நேரம் எழில் தி. க, அவர்கள் 'சோஷல் விழா' சென்னாரவது பற்றி பேசுவார். தி. விழாவிற்கு வெளி அவர்களை அழைப்பது பற்றியும் பேசப்படும். உறுப்பினர்கள் தவறாது வருகை வேண்டப்படுகிறார்கள்.

* * *

சென்னை வடக்கு—8—1—50 ஞாயிறு மாலை 10-மணிக்கு சென்னை, ஓட்டேரி தி. மு. கழகத்தின் சார்பில், புலவர் வே. தி அர்களைவர் அவர்களால் குறள் வகுப்பு நடைபெறும் இடம்: எண் 91, பிரிக்ளின் ரோட், ஓட்டேரி, சென்னை. 12

* * *

திருத்தணிப்பட்டி—இவ்வூர் தி மு. கழகத்தின் தவக்க விழாப் பொதுக்கூட்டம், 8-1-50 ஞாயிற்றுக்கிழமை மாலை 7-மணி அளவில் நடைபெறவிருக்கிறது. செயலாளர் என் சேவிலி தேர்தலில் கடவேண்டுமென்று தோழர்கள் ஏ. எஸ். வேலாயி, இர. சபாபதி, எ. இளஞ்செழியன் ஆகியோர், "தற்கால அரசியல் போக்கு, நமது கழகக் கொள்கைகள்" என்பதைப்பற்றி சொற்பொழிவாற்றுவார்கள்.

இந்தோனேஷியாவுக்கு புதுவாழ்வு ஆஸ்வாஸ்

லண்டன், ஜன. 4—லண்டனில், இந்திய தூதுவரின் ராஜ ஆலோசகரை பிரிட்டிஷ் மந்திரிசபைக் கூட்டம் நியமித்திருக்கிறது.

எற்கனவே ராஜ ஆலோசகராக பிரிட்டிஷ் வட்டாரங்களில் ஒரு பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

வானொலி

(6-1-50 வானொலி நிலையம்)

சென்னை

[311·8 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 சங்கீதராமாயணம்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 வெளிநாட்டுச் செய்திகள் (இ. ச.)
8-30 நாமஸ்மரணை—பாட்டு

பிற்பகல்:

12-30 மத்தியப் பள்ளிகளுக்கு
1-00 மாதர் சிறப்பு
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 வெளிநாட்டுச் செய்திகள் (இ. ச.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்நிலைப் பள்ளிகளுக்கு
2-45 குரல்வளை (இசைத்தட்டு)

மாலை:

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-30 ஆர். ஜானகி—பாட்டு

இரவு:

7-00 என்ன காலத்தில்: சங்கீதம்—பேச்சு
7-15 தமிழில் செய்திகள்
7-30 நாதஸ்வரம் (இசைத்தட்டு)
8-00 வீணை—ராமன்—ராகம்
8-15 ஆர். என். தாயாரம்மி—பாட்டு
8-45 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 என்னை ஈர்த்தவர்கள்
9-30 கோலிருப்பம் (இ. ச.)
10-30 முடிவு

* * *

திருச்சி

[336·8 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 எம். டி. ராமன்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 திருச்சி வானொலிப்பெட்டி
8-30 கே. லலிதா—பாட்டு

பிற்பகல்:

2-30 மத்தியப் பள்ளிகளுக்கு
1-00 சங்கீதம் (இ. ச.)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 எஸ். ஜானகி—பாட்டு
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்நிலைப் பள்ளிகளுக்கு

மாலை:

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-00 ரேடியோ—ராமலிங்கம்
5-40 புள்ளாண்டிப்
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 கே. லலிதா—பாட்டு
6-30 நாம சங்கீர்த்தனம்

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-30 நிகழ்ச்சிகள் (இசைத்தட்டு)
8-00 எஸ். டி. ராமன்—பாட்டு
8-30 ரேடியோ—ராமலிங்கம்
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 இசை வெற்றி—இசை ரேடியம்
9-35 இசைமேளா (இசைத்தட்டு)
10-30 முடிவு

Printed & Published by T M. Parthasarathy at the Mercantile Press. 2/45, Muthumari Chetty Street Madras-1